

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.1.2026) ஆங்கிலப் புத்தாண்டு தினத்தையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.1.2026) ஆங்கில புத்தாண்டு தினத்தையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.1.2026) ஆங்கிலப் புத்தாண்டு தினத்தையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்திய பின்னர் அங்கிருந்த பொது மக்களுக்கு ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*தஞ்சாவூர், ஜன.3-*

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் கும்பகோணத்தில் இன்று நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு :



தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம், இன்று (03.01.2026 - சனிக்கிழமை) காலை 10:00 மணியளவில் கும்பகோணம் அண்ணா அரண்மனையில், மாவட்டக் கழக அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கூட்டத்தில் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டத்தின் பொருள் : திராவிட பொங்கல் 2026 விளையாட்டு விழா போட்டிகள்.

குறிப்பு: கூட்டத்திற்கு வரும்போது வாக்குச்சாவடி பரப்புரை படிவத்தை எடுத்து வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.



திருவாரூரில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் வை.செல்வராஜ் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. கண்காணிப்புக் குழுத் தலைவர் முரசொலி எம்.பி., பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாரிமுத்து எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன், நகர்மன்றத் தலைவர்கள் மன்னை.த.சோழராஜன், கவிதா பாண்டியன், பாத்திமா பஷீரா மற்றும் அரசு அதிகாரிகள் உடன் பங்கேற்றனர்.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் விளையாட்டு வீரர்களுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின், கூடுதல் ஆட்சியர் கோகுல், குண்டாமணி (எ) என்.செல்வராஜ், சுகுணாசங்கரி குமரவேல், சங்கீதா மாரியப்பன், கண்மணி அறிவழகன் மற்றும் பலர் உள்ளனர்.

### ஆ.தாமஸ் ஆல்வா எடிசன் தலைமை! மரியசார்லஸ், டயானா ஷர்மிளா பங்கேற்பு!

# கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழக அலுவலகம், வேளாங்கண்ணி பேரூர்க் கழக அலுவலகம் திறப்பு விழா !

## மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் திறந்து வைத்தார்!

*நாகை, ஜன. 3 -*

நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழக அலுவலகம் மற்றும் வேளாங்கண்ணி பேரூர் கழக அலுவலகம் திறப்பு விழா வேளாங்கண்ணியில் நடைபெற்றது. விழாவிற்கு கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன் தலைமை தாங்கினார்.

வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் டயானா ஷர்மிளா, பொதுக்குழு உறுப்பினர் எஸ்.பி.டி.சார்லஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாங்கண்ணி பேரூர்க் கழகச் செயலாளர் மரிய சார்லஸ் வரவேற்றார்.

விழாவில் நாகை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் கலந்து கொண்டு ஒன்றிய, பேரூர் கழக அலுவலகத்தை திறந்து வைத்தார். விழாவில் மாவட்டக் கழக பிரதிநிதிகள் ஞானசேகரன், இராம. இளம்பரிதி, நரசிம்மன், மாரிமுத்து, சார்லஸ், ஒன்றிய கழக நிர்வாகிகள் சுப்பிரமணியன், அருள்செந்தில், ரவி, பூவை ஆர்.ஜி.முருகு,

அனுசியாஜோதிபாசு, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ரெக்ஸ், ஒன்றிய பிரதிநிதி கந்தையன், வேளாங்கண்ணி பேரூர் சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் ஸ்டாலின், ஒன்றிய வர்த்தக அணி அமைப்பாளர் மு.ப.செல்வம், வேளாங்கண்ணி பேரூர் பொருளாளர் ஏ.ஆர்.ராஜா, பேரூர்க் கழக துணைச் செயலாளர் கலையரசன், ரகமதுல்லா, நிக்சன், வெற்றிவேல், புகழேந்திரன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கார்க்கின், புலிகேசி, ராகவன், டெரிக், பாசில், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ராஜசெல்வம், மதன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் நிர்மல் குமார் மற்றும் கிளை, வர்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை முன்னிட்டு கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின் படி, காரமடையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் 49 ஆயிரம் நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினார். இதில் கழக மாணவரணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, தூய்மை பணியாளர்கள் நல வாரியத் தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, நகர்மன்றத் தலைவர்கள் அறிவரசு, உஷா, தலைமை செயற்குழு உறுப்பினர் அஷ்ரப் அலி, நகர கழக செயலாளர் முனுசாமி, பொறுப்பாளர் குரு பிரசாத், ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், சுரேந்திரன், பிரதீப், காந்தி உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.